TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102006

1. District : மாவட்டம் Tirunelveli    PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption    Year: ஆண்டு 2018    FIR No.: மு.த.அ. எண் 02/2018    Date: நாள் 30.05.2018

2. (i) Act சட்டம் PC Act 1988    Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 29.05.2018 09.30 hrs    Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.05.2018    Time : நேரம் 10.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Tirunelveli Town, 8Km West

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.JOHN VINCENT    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.MANI

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் INDIAN    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Business    (g) Address : முகவரி No.22A, MAIN ROAD, VALLIYOOR

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr.Esakkimuthu, Asst. Elementary Educational Officer, Kalakkadu Range, Tirunelveli District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   No delay. Conducted Preliminary Enquiry.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 30.05.2018-ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் அலுவலகத்தில் இருந்தபோது திரு.ம.ஜாண் விண்சென்ட் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் களக்காடு சரக உதவி தொடக்க கல்வி அலுவலர் திரு.இசக்கிமுத்து என்பவர் மனுதாரரின் அக்கா திருமதி.ம.ரேச்சல் ஜேனட் என்பவருக்கு நம்பித்தலைவன் பட்டயம் RC தொடக்கபள்ளியில் இடைநிலை ஆசிரியை பணி நியமனம் செய்யப்பட்டதை ஒப்புதல் ஆணைக்கு பரிந்துரை செய்து ஆணை பெற்று கொடுக்க ரூ.3,30,000/- லஞ்சமாக கேட்பதாக தெரிவித்திருந்தார். நான் மேற்படி புகார் மனுவை பெற்று, புகார் மனு சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ள அனுமதி கேட்டு சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குனர் அவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்தேன். அதன்படி PE.157/2018/EDN/TI-ன் முதல் நிலை விசாரணை செய்ததிலும், ரகசிய விசாரணையிலிருந்தும் எதிரி திரு.இசக்கிமுத்து வாதி திரு.ஜாண் வின்செண்ட் என்பவரிடம் அவரது அக்கா திருமதி.ம.ரேச்சல் ஜேனட் என்பவருக்கு இடைநிலை ஆசியரியர் பணி நியமன ஒப்புதல் ஆணை வழங்குவதற்காக ரூ.3,30,000/- லஞ்சமாக கேட்டதன் மூலம் ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்ய முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் அலுவலக SP (SR) அவர்களிடம் தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/05/2018.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
(John Vincent. M)

15. Date & Time of despatch to the court.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 30.05.18

Name: பெயர் ..............................
Rank: நிலை .............. No. எண் ..........

திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/2018 u/s 7 of PC Act 1988 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் ம.ஜாண் வின்சென்ட், த/பெ மணி கதவு எண் 22-A மெயின் ரோடு, வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். வள்ளியூரில் P.R சாமில் என்ற பெயரில் மரக்கடை நடத்தி வருகிறேன். என்னுடன் பிறந்த எனது இரண்டாவது அக்கா திருமதி.ஜே.ம.ரேச்சல் ஜேனட் என்பவர் நாங்குநேரி தாலுகா, நம்பித்தலைவன்பட்டயம் R.C தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக கடந்த 15.03.2017ம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறார். எனது அக்கா கணவர் கடந்த 11.09.2007ல் இறந்துவிட்டார். அதனால் எனது அக்கா சம்பந்தப்பட்ட வேலைகளை நான்தான் கவனித்து வருகிறேன். எனது அக்காவின் இடைநிலை ஆசிரியர் பணிக்கான பணி நியமன ஒப்புதல் ஆணையினை திருநெல்வேலி மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் அவர்களிடம் பெறுவதற்காக களக்காடு சரக உதவி தொடக்க கல்வி அலுவலர் மூலமாக பள்ளி நிர்வாகம் 17.04.2018ல் மனு அனுப்பப்பினார்கள். இந்நிலையில் களக்காடு சரக உதவி தொடக்க கல்வி அலுவலர் திரு.இசக்கிமுத்து என்பவர் 26.05.2018ம் தேதி காலை சுமார் 07.00 மணியளவில் அவரது கைபேசி எண் 9486796632ல் இருந்து எனது அக்காவிடம் லஞ்சமாக ரூபாய் ஐந்து லட்சம் பணம் ஏற்பாடு செய்யுங்கள் அப்போதுதான் தங்கள் பணி நியமனத்தை மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தில் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். மேற்படி விபரத்தை எனது அக்கா என்னிடம் 26.05.2018ம் தேதி காலை 07.15 மணிக்கு என்னிடம் தொலைபேசியில் கூறினார். பின்பு நான் எனது அக்காவை நேரில் சந்தித்து எனது அக்காவையும் அழைத்துக் கொண்டு களக்காடு சரக உதவி தொடக்க கல்வி அலுவலர் திரு.இசக்கிமுத்து அவர்களை 26.05.2018 அன்றே காலை சுமார் 10.00 மணிக்கு களக்காடு சரக உதவி தொடக்க கல்வி அலுவலர் அலுவலகத்தில் வைத்து நேரில் சந்தித்தோம். அப்போது உதவி தொடக்க கல்வி அலுவலர் திரு.இசக்கிமுத்து அவர்கள் எங்களிடம் ரூபாய் ஐந்து லட்சம் ரெடி பண்ணுங்கள் அப்போதுதான் பணி நியமன ஒப்புதல் ஆணைக்கு பரிந்துரை செய்ய அனுப்புவேன் என்று சொன்னார். எனது அக்கா நான் டெட் பாசாகிதான் வேலையில் சேர்ந்துள்ளேன். பின்பு நான் ஏன் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவர் நீங்கள் பணம் கொடுத்தால்தான் நான் பரிந்துரை செய்து அனுப்புவேன் என்று சொன்னார். எனது அக்காவும் நானும் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்தோம். எனது அக்கா A.E.E.O திரு.இசக்கிமுத்துவிடம் நான் எங்கும் அலையமுடியாது. பணத்தை பற்றி என் தம்பியிடம் பேசிக்கொள்ளுமாறு என்னுடைய செல் நம்பரை அவரிடம் கொடுத்தார். அப்போது திரு.இசக்கிமுத்து எங்களிடம் 29.05.2018ல் அலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டுவிட்டு அவரை போய் பார்க்க சொன்னார். அதன் பின்பு வீட்டிற்கு வந்துவிட்டோம். 29.05.2018 அன்று காலை சுமார் 09.00 மணியளவில் எனது செல்போனில் இருந்து உதவி தொடக்க கல்வி அலுவலர் திரு.இசக்கிமுத்து அவர்களை தொடர்பு கொண்டபோது அவர் தான் வள்ளியூரில்தான் இருக்கிறேன். உங்கள் அக்கா வேலை விஷயமாக பேச வேண்டும் என்று என்னை கூறி என்னை பழைய பேருந்து நிலையம் அருகே வரும்படி கூறினார். அதன்படி நானும் சுமார் 09.30 மணியளவில் சென்று அவரை சந்தித்தேன். அப்போது அவரிடம் எனது அக்காவின் பணி நியமன ஒப்புதல் ஆணை பற்றி கேட்டபோது அவர் ரூபாய் ஐந்து லட்சம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டார். நான் பணம் ரெடியாகவில்லை. எனது அக்காவிற்கு கணவர் இல்லை. கஷ்டமாக உள்ளது. கொஞ்சம் குறைக்க சொன்னேன். உங்கள் அக்காவிற்கு திருநெல்வேலி DEEO அலுவலகத்தில் உள்ள DEEO, உதவியாளர், கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பணம் கொடுத்தால்தான் ஒப்புதல் ஆணையை பழைய தேதியை போட்டு எல்லாவற்றையும் முடித்து தருகிறேன் என்று சொல்லி கடைசியாக கண்டிப்பாக ரூ.3,30,000/- தந்தால்தான் ஒப்புதல் ஆணை வாங்கி தருவேன் என்று சொன்னார். மேலும்ஏற்கனவே உங்கள் அக்கா மனுவை நான் பரிந்துரை செய்து DEEO அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளேன் என்று சொன்னார். நானும் வேறு

வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு இரண்டு நாளில் பணம் ரெடி பண்ணிவிட்டு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு எனது அக்காவிடம் இந்த விபரத்தை சொன்னேன். அவர் நீயே பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டார். நான் யோசித்து பார்த்ததில் சட்டப்படியாக செய்ய வேண்டிய அரசு பணிக்கு உதவி தொடக்க கல்வி அலுவலர் லஞ்சமாக ரூபாய் 3,30,000/- கேட்கிறார் என்று எனது மனம் கஷ்டப்பட்டது. AEEO திரு.இசக்கிமுத்து மற்றும் DEEO ஆபீஸ் அலுவலர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே இன்று 30.05.2018 புகார் மனு கொடுக்கிறேன். AEEO திரு.இசக்கிமுத்து அவருக்காகவும், DEEO ஆபீஸ் அலுவலர்களுக்காகவும் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3,30,000/- கொண்டு வந்துள்ளேன். என்னிடம் எனது அக்காவிற்கு இடைநிலை ஆசிரியர் பணிக்கு ஒப்புதல் ஆணை வழங்குவதற்கு லஞ்சம் கேட்ட தொடக்க கல்வி அலுவலர் திரு.இசக்கிமுத்து மற்றும் திருநெல்வேலி DEEO அலுவலக ஊழியர்களாகிய உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் மீது நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நாள்:30.05.2018. இப்படிக்கு, ஒப்பம் (M.John Vincent) 30.05.2018. இன்று (30.05.2018) காலை 10.00 மணிக்கு நான் பொறுப்பிலிருந்தபோது இந்த மனுவை பெற்றுக்கொண்டு மேல் நடவடிக்கைக்காக இயக்குனர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தலைமையிடம் சென்னைக்கு அனுப்பினேன். ஒப்பம் இரா.ஆதீஸ், 30.05.2018 ஆய்வாளர், ஊழல் தடுப்பு (ம) க.பிரிவு, திருநெல்வேலி. 30.05.2018ம் தேதி மின்னஞ்சல் மூலம் கிடைக்கப்பெற்ற சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, இயக்குநர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற மெமோ எண். PE.157/2017/EDN/TI, நாள் 30.05.2018 என்ற உத்தரவு படி மேற்படி மனுமீது முதற்கட்ட விசாரணை (Preliminary Enquiry) PE.157/2018/EDN/TI என பதிவு செய்து எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். ஒப்பம் இரா.ஆதீஸ், ஆய்வாளர், ஊழல் தடுப்பு (ம) க.பிரிவு, திருநெல்வேலி, 30.05.2018.

எனது முதல் கட்ட விசாரணையில் மனுதாரரின் குணாதிசயங்கள், நன்னடத்தை விசாரித்தும், எதிர் மனுதாரரான AEEO திரு.இசக்கிமுத்து களக்காடு அவர்களின் நன்னடத்தை பற்றியும் ரகசிய விசாரணை செய்ததிலும் அவர் குணாதிசியங்கள் மோசம் என தெரியவந்தது. மேற்படி முதற்கட்ட விசாரணையில் எதிரி திரு.இசக்கிமுத்து வாதி திரு.ஜாண் வின்சென்ட் என்பவரிடம் அவரது அக்கா திருமதி.ம.ரேச்சல் ஜேனட் என்பவருக்கு இடைநிலை ஆசிரியை பணி நியமன ஒப்புதல் ஆணை வழங்குவதற்காக ரூ.3,30,000/- லஞ்சமாக கேட்டதன் மூலம் ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்ய முகாந்திரம் (Prima- Fascie) இருந்த காரணத்தால் அதனை கனம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் சென்னை அவர்களின் அலுவலக SP (SR) அவர்களிடம் தொலைபேசி மூலம் தெரிவித்து, அன்னாரின் அனுமதி பெற்று இன்று (30.05.2018) பிற்பகல் 13.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2018 பிரிவு 7 of PC ACT 1988 படி வழக்குப்பதிவு செய்தேன்.

அசல் FIR, அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஒப்பம் இரா.ஆதீஸ், ஆய்வாளர், ஊழல் தடுப்பு (ம) க.பிரிவு, திருநெல்வேலி, 30.05.2018.

30/05/2018.
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு (ம)
க.பிரிவு,
திருநெல்வேலி.